செய்தி வெளியீடு நாள் : 26.12.2023

"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்"
திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்து காவல்துறை,
நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்துத்துறையுடன் இணைந்து
மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆலோசனை.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (26.12.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்"** திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்துத்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை திறந்து வைப்பதற்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அலுவலர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தார்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு. அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், தாம்பரம் காவல் ஆணையாளர்/கூடுதல் தலைமை இயக்குநர் முனைவர்.அ.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள், காவல் இணை ஆணையர் (போக்குவரத்து) முனைவர். பா. மூர்த்தி, இ.கா.ப., அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் திருமதி. ஆர். அனாமிகா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (போக்குவரத்து) திரு.ந.குமார் அவர்கள், போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்கள், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate ™